# அஞ்சிய பெண்

திருநீறு இட்டுக்கொண்டு வெளியில் வந்தேன். தோள்மேல் குடங்களுடன் விச்சுவும் கணபதியும் இறைவனுக்கு அபிஷேக தீர்த்தம் எடுத்து வந்துகொண்டிருந்தார்கள். புதுப் பேச்சுக் குரல் கேட்டது; திரும்பினேன். கணவன் மனைவியராகத் தோற்றமளித்த இரண்டு பேரைப் பார்த்தேன்.

"பாருங்கோன்னா! குடம் எத்தனை அதுங்கிக் கிடக்கு! இதிலேயா தீர்த்தம் வருகிறது ஸ்வாமிக்கு!" என்றாள் அந்தப் பெண்.

"பெருமாள்தான் பணக்கார சாமி!" என்றார் அவர்.

"ஐயோ பாவம்!... நேற்று திருப்பதியிலே பார்த்த கூட்டமும் தடபுடலும்!.... இதுகூட பெரிய கோயில்தானே? பக்க பக்கத்திலிருக்கிற இரண்டு கோவில்களுக்கும் ரொம்பத்தான் வித்தியாசம்" என்று அந்தப் பெண் எம்பெருமானுக்காக இரக்கப்பட்டாள்.

"அவர் வட்டியும் முதலுமாக வாங்குகிற சாமி! நீ கூட திருப்பதி திருப்பதி என்றுதான் சொன்னாயே தவிர காளஹஸ்தியின் நினைவாவது இருந்ததோ? உங்கப்பா எழுதின பிறகுதானே..."

"இவ்வளவு கிட்டக் கிட்ட இருக்குன்னு தெரியுமோ? உங்களுக்கு மட்டும் தெரிந்திருந்ததோ!.... அதோதோ...... அந்தப் பக்கம் என்ன பிரும்மாண்டமாய் இருக்கே!.... வாங்கோன்னா . . . " அப்பக்கம் கிளம்பினாள் அந்தப் பெண்.

சுவாமி தரிசனம் முடிந்து விடட்டுமே; சுற்றி வருகிறதற்குள் கூட்டம் வந்துவிடும்; மெனக்கெட சீக்கிரமா வந்துட்டு..." என்றார். தடையை நிறுத்திக்கொண்டு நின்றே விட்டார் அவர்.

"மெனக்கெட என்ன? காலையில் சீக்கிரம் கோவிலுக்கு வந்தால் மனசுக்கு எவ்வளவு நன்னாயிருக்கு! அரை மணியாகும்னு சொன்னார்களேன்னு பார்த்தால்...." என்று அந்தப் பெண் திரும்பி வந்தாள்.

நான் நின்ற பக்கம் இருவரும் நோக்கினார்கள். அங்கவஸ்திரத்தை மடித்து இடுப்பில் கட்டியபடியே அவர்களின் பேச்சைக் கவனித்து வந்த நான் இப்போது கவனியாதவன்போல பாவனை செய்தேன்.

"இப்போ சுவாமி தரிசனம் முடியுமா?" என்று அவர் அடக்கமாகக் கேட்டார்.

அவர்களை உள்ளே அனுப்பிவிட்டு இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு நானும் சென்றேன்.

“ஸ்ரீ என்றால் சிலந்தி. காளம்தான் பாம்பு. ஹஸ்தி என்பது யானை. இந்த மூன்றும் முக்தி பெற்ற ஸ்தலம் ஸ்ரீகாளஹஸ்தி.” அவர்களுக்குச் சொன்னேன் இந்த விளக்கம்.

"கண்ணப்பருக்கு முக்தியளித்த இடம்னா சொல்லுவா!” என்றாள் அந்த பெண் மீனாட்சி.

"அதுவும்தான்; இதோ கண்ணப்ப நாயனார் சிலை" என்று காட்டினேன்.

"ஓ, அப்படியா?" என்று சிலையினருகு வந்து கவனித்தாள் உடனே.

"இங்கே கவனி; அபிஷேகம் நடக்கிறது, " என்று கணவர் சொன்னதும் மறுபடி வந்து கைகூப்பி நின்றாள். கணபதியும் விச்சுவும் இறைவனுக்கு நீராட்டிக் கொண்டிருந்தனர்.

"இந்த சிவலிங்கத்தை யாரும் தொடுகிறதில்லை; சங்காபிஷேகம்தான் இங்கே. சுயம்புவாகத் தோன்றின லிங்கம்," என்று கூறினேன்.

"ஓஹோ, அதான் சங்கு சங்காக ஜலம் ஊற்றுகிறார்களா? அதென்ன அந்தண்டை, வெளுப்பாக?" இதுவும் அவள் கேள்வி!

"வெள்ளிக் கவசம்; அபிஷேகம் முடிந்ததும் சாத்த வேண்டும்" என்றுரைத்துவிட்டு லிங்கத்தின் அருகு போனேன். சுயம்புவாகத் தோன்றின சிவலிங்கத்தின் மேற்பகுதியான காளம் மட்டும்தான் எல்லோருக்கும் தெரியக்கூடியது. கவசமிட்ட பின் பாம்புப் படம் மட்டும் தென்படும். பெரும்பகுதியான லிங்க உருவம் மறைந்தே இருக்கும் என்பதை காட்டினேன்.

"நல்ல வேளை, நாம் சீக்கிரமாய் வந்தோம். அவரும் விவரமாய்ச் சொல்றார்," என்று கணவனிடம் உவகையோடு சொல்லிக்கொண்டாள் அவள்.

எனக்கும் சந்தோஷம். விஷயங்களை அறிய ஆர்வமுள்ள பெண்களுக்கு மகிழ்ச்சியளித்தோம் என்ற திருப்தி. இறைவனுக்கு மணமுள்ள மலர்களைத் தூவுவது போல ஆசையோடு கூடிய பக்தியைச் செலுத்தும் பெண்ணாக அவள் விளங்கினாள். சம்பிரதாய பக்தியைக் கொண்ட என் கண்களுக்கு, அப்படித்தான் தோன்றினாள்!

கர்ப்பக்கிருஹத்தினுள் எரிந்த தீபச் சுடர்களைக் காட்டினேன். "இந்தக் காளஹஸ்தி வாயு பூதஸ்தலம். இதோ பாருங்கள். லிங்கத்தினருகு எரியும் இந்தச் சுடர் சலனமடைகிறது. காற்றின் சாட்சியாகக் காட்டுகிறது. மற்ற தீபங்கள் கொஞ்சங் கூட அசையவில்லை" என்று காண்பித்தேன்.

"ஆமான்னா!" என்றாள் அவள் வியப்புடன். "ஆமாம், ஆச்சரியம்" என்றார் அவள் கணவர். "என்னமாயிருக்கு சாட்சி! என்று வியந்து சில விநாடி

தீபங்களையே மாறி மாறிப் பார்த்தாள் அவள். ஒரு பெரிய அதிசயத்தைக் கண்டு சொன்ன மாதிரி எனக்கும் உவகையுண்டாகியது. மறுகணம்?

ஒரு திருப்திக்கு அப்புறம் அதிருப்தி என்ற இயற்கை நியதி, இறைவனின் சட்டம் இருக்கிறதே!

"நீங்கள் சுவாமியண்டை விளக்கை ரொம்பப் பெரிய திரி போட்டு பெரிசாய் எரியவிட்டிருக்கேள். மற்ற விளக்கெல்லாம் சின்னதாய் எரிகிறது. அதனால் தான் இந்த விளக்கு மட்டும் ஆடி அசையறதுன்னு நினைக்கிறேன்," என்றாள் அந்தப் பெண்.

எனக்கு என்னமோ போலாகிவிட்டது. ஆராய்ச்சி நோக்குடன் பார்ப்போருக்கு எதிலுமே நம்பிக்கை நிலைப்பதில்லை. "இது வாயு பூதஸ்தலம்" என்று மீண்டும் சொன்னேன்.

"இந்த விளக்கையும் சிறிதாக வைத்திருந்தால் ஆடாது என்று தோன்றுகிறது-இல்லையா?" என்று அந்தப் பெண் தன் கணவனிடம் திரும்பினாள்.

அவர் இங்கிதம் நன்றாக அறிந்தவர்தாம்.

"அதை இங்கே தர்க்கம் பண்ணணுமா?" என்று அவர் கேட்டுவிட்டதும் "இல்லை-சொன்னேன்" என்று தயங்கி விட்டு உடனே சமாளித்துக்கொண்டாள்.

"இப்படித்தான் விளக்குகளைச் சின்னதும் பெரிசுமாய் ஏற்றுவதை வழக்கமாய் வைத்து வாயு பூதஸ்தலம்னு சொல்கிறதே ஒரு சூட்சும ஏற்பாடுதானே!" என்று திருப்தியாகத் தனக்குத்தானே விடையளித்துக்கொண்டு சந்நிதியைப் பார்த்து அஞ்சலி செய்தவாறு நின்றாள்.

கணபதி அர்ச்சனை செய்தான். "பெயர்?" என்று கேட்டான். கவனித்தேன்!

"கார்க்கீ கோத்ரம்; அனுராதா நட்சத்திரம், நாராயணன்" என்று சொன்னார்.

மூன்றும் சிறப்பான பெயர்கள்!

அவரை நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு அவர் மனைவி பக்கம் நோக்கினேன். திகைத்தேன்.

"என் கையில் தட்சிணைக்காகவாவது இரண்டணா தாங்கோ" என்று கணவனுக்கு வெகு அருகாமையில் நண்ணினாள். நொடியில் எத்தகைய மாறுதல் அவள் முகத்திலே! "ஒரு அர்ச்சனைக்காவது என் பேர் சொன்னேளா?" என்று அடக்கின குரலில் ஆணித்தரமாகக் கேட்டாள்! கேட்டவள் உடனே விலகி நகர்ந்தாள். நான் அவர் முகத்தைப் பார்த்தேன். நெற்றி சுளித்த பாவனை ஒரு விநாடி தெரிந்தது; மறைந்தது.

எனக்கு ஆச்சர்யம்!

கோவிலுக்கு வந்திருக்கிறார்கள். புனிதமான இடத்தில் உயர்ந்த கருத்துகளும் உணர்ச்சிகளும் எழ வேண்டுமே! இந்தப் பெண் அற்பத்தனமாக "என் பேர் சொல்லவில்லை," என்கிறாளே!... அதுவும் யாருக்கு? கடவுளுக்கு! இத்தனைக்கும் அவர்கள் கணவன் - மனைவி. ஒருவரின் சிறப்பு மற்றவர்க்கும் உயர்வு. ஒருவரின் தாழ்வு மற்றவர்க்கும் தாழ்வு; இத்தகைய தாம்பத்திய உறவிலே ஒரு பெண் இப்படி ஒரு உப்புப் பெறாத விஷயத்திற்கா சின்னத்தனம் காட்டுகிறாள்!

'அந்தப் பெண்ணைப் பழிக்கும் அற்பத்தனம் நமக்கு ஏன்?' என்ற வீம்புடன் 'ஏதோ விளையாட்டுப் புத்தியில் கேட்டிருப்பாள்,' என முடிவு செய்தேன்.

என் போன்றவர்கள் அவளை சிறு பெண்ணாகக் கருதி 'விளையாட்டுப்புத்தி' எனலாம். ஆனால் சிறுவர் சிறுமியர்க்கு அவள் சரியான அம்மாமிதான்!

எத்தனையோபேர் வந்துபோகும் சமயமாக இருந்திருந்தால் நான் இவர்களைப் பற்றி ஏன் அதிகம் கவனிக்கப்போகிறேன்? காலை வேளையில் முதன் முதலாக வந்த தம்பதி என்ற காரணம் தான் - அவர்கள் மீது கவனம் முதலில் விழுந்தது. பிறகு அந்தப் பெண்ணின் சுட்டித்தனத்தினால் அதிகம் பதிந்தது!

இருவரையும் அம்மன் சந்நிதிக்கு அழைத்துப் போனேன். அர்ச்சனைக் சீட்டுக் கொடுத்தார் அவர்.

"பேர் நாராயணன்தானே? நட்சத்திரம் என்ன?" என்று கேட்டேன் - திடீரென்று மறதி!

"மீனாட்சி, மகநட்சத்திரம், செய்யுங்கள்" என்றார் அவர்.

"அடாடா" என்று மீனாட்சி முறுவலுடன் முணுமுணுத்தபோது எனக்கு நாராயணனின் அனுராதா நினைவுக்குத் திரும்பிற்று.

"கார்க்கீ கோத்ரம்தானே?" என்று கேட்டேன்.

"இப்போ ஸகோத்திரம்தான் நாங்கள்" என்று மீனாட்சி சிரித்தாள்.

அர்ச்சனையைச் செய்தேன். "அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த நாராயணனும் மகநட்சத்திரத்தில் பிறந்த மீனாட்சியும் தம்பதியாக உன் சந்நிதி வந்துளர். தேவீ! அவர்களுக்கு ஆயுராரோக்கிய சுக சௌக்கியங்களும் பாக்கியங்களும் தந்தருள்!" என்று அம்பிகையை வேண்டிக்கொள்ளும் பணியை முடித்துவிட்டுக் குங்குமம் வழங்கினேன்.

கோயிலைச் சுற்றி வர அவர்கள் கிளம்பினார்கள். மீனாட்சி சில சமயம் கணவனை முந்திக்கொண்டு போய் சில இடங்களைப் பார்த்தாள். 'வந்து

இதைப் பாருங்களேன்,' என்று கூவினாள். சில சமயம் பின்தங்கி நின்று, "எங்கே போகிறீர்கள், இதைப் பார்க்காமல்?" என்று தடுத்து நிறுத்தினாள். வார்ப்பு விக்கிரகங்கள் வரிசையாகக் காட்சியளித்த பகுதியில் அவள் நெடுநேரம் கவனம் செலுத்தியதைக் கண்டேன். அவளைக் கவனிக்க வேண்டும் என்ற குறிப்பில்லை எனக்கு. அப்படி நேர்ந்தது. இரண்டு நாள் சொந்த அலுவலாக வெளியூர் போகிறேன். கோவிலிலிருப்போருக்குச் சொல்ல வேண்டியதைக் கவனிக்கச் சுற்றினேன். அடிக்கடி தென்பட்டார்கள்.

விசாலமான வெட்டவெளி மண்டபத்தின் வழி வரும்போது நாராயணன், "கண்ணப்பர் மலையாமே! எங்கிருக்கு?" என வினவினார். கோவிலின் பிராகாரத்தையொட்டினாற்போல் தென்படும் மலைப்பாறைதான் கண்ணப்பர் குன்றம்.

கோவிலுக்கு வெளியில் வந்தோம். "அம்மாடி, வெய்யலே தெரியல்லையே!" என்று சொல்லிக்கொண்டு மரங்களடர்ந்த அவ்விடத்தில் ஒரு பாறைமேல் மீனாட்சி உட்கார்ந்தாள்.

"உட்கார நேரமில்லை. பன்னிரண்டு மணிக்கு திருப்பதியிலிருக்கணும்! மூன்று மணிக்கு அங்கிருந்து புறப்படணும்," என்றார் நாராயணன்.

"மலை ஏறிவரக் கஷ்டமாயிருக்காதே!" என்று கேட்டவாறே குன்றைப் பார்த்தாள் மீனாட்சி.

"பாதை கிடையாது. மலை உயரமில்லை; பாறைகளாயிருக்கும்" என்று சொல்லிவிட்டு, சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு பையனைக் கூப்பிட்டு "வழி காட்டுடா" என்று உத்தரவு போட்டுவிட்டுப் புறப்பட்டேன். என் அவசர அவசியம் அங்கு நிற்கவிடவில்லை.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு ஒரு வீண் யோசனை வந்தது! "கண்ணப்பர் மலைமேலிருந்து பார்த்தால் ஊர் முழுதும் நன்றாகத் தெரியும். இங்கே ஓடும் நதியின் பெயர் ஸ்வர்ணமுகி" என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே என்பதுதான்!

ஆனால் மறுகணம் -"ஊர் முழுதும் தெரிகிறதே!" என அந்தப் பெண் குன்று மேல் கைகொட்டிச் சந்தோஷப்படும் கற்பனைக் காட்சியைக் கண்டேன். ஆம், நான் சொல்லித்தான் ஊர் தென்படுமா? "நதியின் பேர் தடபுடலாயிருக்கே! நதி அழகாகவேயில்லை! பஸ்ஸில் வரும்போது கூடப் பார்த்தேனே! கோடை காலம் என்பதனாலா?" என்று அந்தப் பெண் என்னை ஒரு எதிர்க் கேள்வி கேட்டிருப்பாள் என்றும் யோசித்தபொழுது 'ஒரு வார்த்தை சொல்லவில்லை' என்ற என் வருத்தம் பறந்துவிட்டது!

** ** **

சிவகுமாரன் முருகனுக்கு உகந்த நன்னாள்; கிருத்திகைத் திருநாள். போகும் வழியில் திருத்தணிகை. குமரப் பெருமானை தரிசனம் செய்யாமல் போக என் மனம் ஒப்பவில்லை. தணிகாசலம் ஏறி, கோவிலில் நுழைந்து பையை அருகில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தேன். திருப்புகழ் பாடிக் கொண்டிருந்த ஒரு பாகவதரைச் சுற்றி சிலபேர்தான்; கர்ப்பக் கிருஹ வாசலில்தான் பக்தர்களின் கும்பல். முண்டியடித்துக்கொண்டு போக அவசியமில்லை எனக்கு. காலையில்தான் வண்டி.

"அம்மாடியோ!" என்ற குரல் கேட்டது. மீனாட்சிதான்.

"இன்றைக்கு சுவாமி தரிசனம் நம்மாலே முடியாது போலிருக்கே!" என்றார் நாராயணன்.

கொஞ்ச நேரம் அந்தக் கும்பலையே வெறிக்கப் பார்த்து வாசற்படியருகு நின்றார்கள்!

"நாளைக் கார்த்தாலே வந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்! அந்தக் கண்ணப்பர் மலை ஏறி வந்ததே என் உடம்பு அலண்டு போச்சு. இந்த மலை ஏறி வருகிறதற்குள் ஜீவனே ஒடுங்கிப் போச்சு!" என்றாள் மீனாட்சி.

"வந்தாச்சு; சும்மாச் சொல்லிப் பிரயோசனமில்லை," என்றார் அவர்.

"வந்தாச்சு சரி. வரதுக்கு முந்தியே சொன்னேனே! ஒரு நாளைக்கு ஒரு இடமாப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷமாய்ப் பார்க்கலாம்! இப்படித் திண்டாடிண்டு.."

"சொன்னதையே சொல்லு நீ"

"அழகா, சின்னமலை. விடியற்காலம் குளிச்சுட்டு வந்தால் எவ்வளவு ஜோராயிருக்கும்"

இப்பொழுது நாராயணன் பேசவில்லை.

மலைத்து நின்ற இடத்தில் இப்படி ஒரு தர்க்கம் செய்துகொண்ட தம்பதி என்னை பார்க்கவில்லை. ஒளிந்திருக்கவில்லை நான்! அவர்களுக்கு என்னை அடையாளந்தான் தெரியவில்லை.

"கூட்டங் குறையட்டும்" என்று பின் திரும்பினார்கள். "திருப்பதி மாதிரி க்யூவோ, டிக்கெட்டோ வைத்தால்தான் நமக்கெல்லாம் சரி. தரிசனம் கிடைக்கும் என்று நம்பலாம். எனக்கு சந்தேகமாத்தானிருக்கு . . ." என்று சொன்னவண்ணம் தாண்டிச் சென்றார் நாராயணன்.

உடனே மீனாட்சி ஆவலுடன் "திரும்பிப் போயிடலாமா? காலையிலே வரலாம்!" என்றாள்.

"மறுபடி காலையில் வருகிற பேச்சு முடியாது. எத்தனை நாள் சுற்றுகிறது? நாளைக்கு மெட்ராஸில்தான் பகல் சாப்பாடு" என்று நாராயணன் சொல்லிவிட்டார்.

"வந்துவிட்டு தரிசனம் பண்ணாமல் போகிறதா?" என்று அவள் சந்தேகப்பட்டதும், "அது முடியுமா? பத்துப் பத்தரை வரை பார்ப்போம்" என்று கூறியவாறு அவர் வாசற்படி தாண்டி இறங்கிப் போனார். மீனாட்சி கும்பலைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே அவரைத் தொடர்ந்து சென்றாள். "பயமாத்தானிருக்கு" என்று அவள் மெல்லச் சொல்லிக்கொண்டது என் செவியில் நன்றாக விழுந்தது.

இந்தப் பெண்ணுக்கு மனதில் பயம் என்பது கூட இருக்குமோ? எனக்குள் நானே சிரித்துக்கொண்டேன்.

'மகத்துப் பெண் ஜகத்துக்கு அதிசயம்' என்பார்களே-மீனாட்சி விஷயத்தில் ரொம்ப சரி. நாலு குழந்தைகளுக்குத் தாயாகவிருக்கக்கூடிய வயது. இருபத்தி ஐந்துக்குக் குறைவில்லை. ஆனால், 'சுவாமிக்கு என் பேர் சொல்லவில்லை!' என்று கணவனிடம் குறைகூறும் குழந்தைப் புத்தி! "யார் பேர் சொன்னாலென்ன? அட, இந்த அர்ச்சகர் சொல்லித்தானா கடவுளுக்கு என் பேர் தெரியவரும்?" என்று கேட்கக்கூடிய துடுக்குத்தனம் அவளுக்கு இருக்கிறது. கேட்டது என்னவோ அதற்கு எதிரிடையான கேள்விதான். ஆனால், அதைக் கேட்கக் கூசினாளா? பயந்தாளா?

கால் மணி நேரங்கழித்து மறுபடியும் உள்ளே வந்தார்கள்.

"போய் நின்று பார்க்கலாம்" என்று நாராயணன் கும்பலை நெருங்கி நின்றார். மீனாட்சி துவாரபாலகர் சிலையருகே சாய்ந்து நின்றாள். வாடிக் களைத்துத்தானிருந்தாள். கூட்டத்தில் சில பேர் குழந்தைகளைத் தோளில் தூக்கிக்கொண்டு முன்னேறப் பார்த்தார்கள். முந்துவதும் பின்னே தள்ளப்படுவதும் மீண்டும் முன் நகருவதும் - அமர்க்களக் காட்சி. முகஞ்சுளித்த நாராயணன் மனைவியின் பக்கம் சென்று நின்றார்.

"குழந்தையும் குட்டியுமாக வந்து எப்படி தைரியமாக மல்லுக்கு நிற்கிறார்கள்! என்றாள் மீனாட்சி.

"தைரியமென்ன? முரட்டுத்தனம்!" என்றார் அவர்.

காலையில் தோன்றாத ஐயம் இப்போது எனக்கு வந்தது. இந்தத் தம்பதிக்கு மக்கட்பேறு இருக்கிறதோ?

கொஞ்ச நாட்களுக்கு முன்பு இப்படித் தான் ஒரு தம்பதி சுவாமி தரிசனத்துக்கு திருப்பதி வந்திருந்தனர். மக்கட் செல்வம் வேண்டி தலயாத்திரை வந்தவர்கள் என்று கருதி, "குழந்தைகள் இல்லையா?" என்று கேட்டுவிட்டேன்.

"ஏன்? ஆறு பேர் இருக்கிறார்கள்!" என்றாள் அந்தம்மாள், பதட்டமடைந்தவளாய்.

நாக்கைக் கடித்துக்கொண்டேன். பெற்ற மனம் படைத்தவளுக்கு என் கேள்வி வேதனையளித்திருக்குமோ? பிராம்மண வாக்கு' என்ற மாதிரி ஏதாவது ஆகிவிடுமோ என்று அந்த அன்னை பயந்துவிட்டால்.....?

"அந்தம்மாள் வயிறு குளிர்ந்தேயிருக்க அருள் செய்!" என்று உடனே காளஹஸ்திச்வரனை உளமார வேண்டினேன்.

அன்றைக்குக் கற்ற பாடம்தான், இன்று இவர்களைக் கண்ட உடனே என் மனதில் ஐயமுண்டாகவில்லை. குழந்தைகளின் தொல்லையும் குடும்பச் சுமையும் மறந்து கொஞ்ச நாள் சுற்றுவதற்கு தம்பதிகள் தனித்து வருவது சகஜமாகிவிட்டது. மைசூரும், ஊட்டியும், மகாபலிபுரமும் போகிறார்கள் - சில பேர். அது போல தல யாத்திரையும் வருகிறார்கள் என்று தெரிந்துகொண்டேன் - குட்டுப்பட்டு!

"குழந்தையும் குட்டியுமாக இழுத்துக்கொண்டு எப்படி வருகிறார்கள்!" என்று தான் மீனாட்சியும் வியந்தாள் போலும்.

** ** **

கால் கடுத்ததோ என்னமோ மீனாட்சி சுற்றுமுற்றும் பார்த்தாள். நான் அமர்ந்திருந்த பக்கம் பார்த்தாள். கணவனிடம், "அங்கே உட்காரலாம்" என்றாள். "போக வேண்டியதான்னு நினைக்கிறேன்" என்றார் அவர். மீனாட்சி "அப்படீன்னா . . . " என்று தடுமாறினாள். கிட்டத்தட்ட என்னருகே வந்தும் அவர்கள் என்னைக் கண்டு கொள்ளவில்லை.

"அரை மணியில் கூட்டம் கரைந்துவிடும். உட்காருங்கள், எனக்குத் தெரிந்த அர்ச்சகர்தான் இங்கிருக்கிறார். அவரிடம் சொல்கிறேன்," என்றேன்.

"ஆனாலும் ரொம்ப நெருக்கறது. திருப்பதியில் கூட கஷ்டமில்லை" என்று சொன்னவாறு நாராயணன் உட்கார்ந்தார்.

"காளஹஸ்தியிலே எவ்வளவு நிம்மதியான தரிசனம் கிடைச்சுது! அதற்கு திருஷ்டி பரிஹாரம் இது!" என்று கூறியபடி மீனாட்சியும் அமர்ந்தாள்.

நன்றாக உட்கார்ந்து என்னைப் பார்த்ததும் நாராயணன், "உங்களைப் பார்த்தேனே . . . " என்று இழுத்தார்.

"காளஹஸ்தியில்தான்," என்று முறுவலித்தேன். புரிந்துகொண்டார்; கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மீனாட்சி திரும்பி, " இந்த மாமா . . . " என்றாள் மெல்ல.

நாராயணன் சொன்னதும் "ஆமான்னா! அங்கேயும் எல்லாம் விவரமாச் சொன்னார்! இங்கேயும் நமக்கு ஆதரவாக வந்துட்டாரே!' என மகிழ்ந்து போனாள்.

என் வாக்கை நிறைவேற்றினேன். வேல்முருகனைக் கண்டு பூரித்து மகிழ்ந்தோம். டவாலிச் சேவகன் எங்களுக்கு வழி செய்து சந்நிதிக்குக் கூட்டிச் சென்றான். "இப்படி ஒரு ஒத்தாசை இல்லாமல் நாம் பார்க்கிறதேது?" என்று மீனாட்சி நன்றி பொங்கச் சொன்னாள். "தரிசனமில்லாமலே திரும்பிப் போயிருப்போமோ என்னவோ?" என்றார் நாராயணன்.

மயில் வாகனக் காட்சியைப் பார்க்க அழைத்துச் சென்றேன். கொஞ்ச நேரம் காத்திருந்தோம். களைப்போ என்னவோ மீனாட்சியின் கலகலப்பு ஒடுங்கிவிட்டது. உற்சவர் வந்தார்; மயில் ஏறினார். கை குவித்து வணங்கிவிட்டுப் புறப்பட்டோம். நானும் காலை வண்டிக்குத்தான் போகிறேன். அவர்கள் ரயில்வே ஸ்டேஷனில் சாமான்களை வைத்து வந்ததால் அங்கேயே படுக்கப்போகிறார்கள். குன்றின் மீது இரவு தங்க எண்ணி இருந்த நானும் அவர்களுடனேயே கிளம்பினேன். போனால் ஒருவருக்கொருவர் துணையாச்சு.

மீனாட்சி விடுவிடுவென்று படிகளில் இறங்கினாள். சில சமயம் எங்களுக்காக நின்றாள். பிறகு மீண்டும் இறங்கியோடினாள். "போகும்போது பிச்சைக்காரர்கள் கைநீட்டவில்லை; வரும்போது ஏன் இப்படித் துளைக்கிறார்கள்!" என்று ஆச்சரியப்பட்டாள். அலுத்தாள். படிகளில் நிற்கவே கூசினாற்போல் ஓடினாள்.

அடிவாரம் வந்துவிட்டோம். நாராயணன் வாங்கின ஓர் டஜன் வாழைப்பழங்களை மூவரும் தின்றோம். "தாகமானதாகம். குளத்து ஜலம் குடிக்கப் பிடிக்காது!" என்றாள் மீனாட்சி.

"சோடா குடிம்மா" என்றேன். அவள் பதில் பேசவில்லை. ரயிலடி போகும் வழியில் பல கடைகள். "காப்பி குடிக்கிறேளா?" என்றேன்.

"சர்த்தான்; இந்த வேளையிலா?" என்று சொல்லி வேகமாக நடந்தாள். சோடாக் கடைகளைக் கண்டதும் மீண்டும் சொன்னேன்.

"வேண்டாம், வேண்டாம்" என்றாள்.

"'கிரஷ்'ஷெல்லாம் குடிக்கும்போது தான் நன்றாயிருக்கும். அப்புறம் தாகம் ஜாஸ்தியாகும்" என்று சொன்னார் நாராயணன்.

"நான் கேட்டேனா?" என்று கேட்டுவிட்டு மீனாட்சி விசுக் விசுக்கென நடந்தாள்.

"இப்படி நடந்தால் தாகம் எடுக்காதா?" என்று நாராயணன் முனகினார். நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டேன்.

ஒரு சோடாக் கடையில் நின்று "இப்படி வாம்மா" என்று அழைத்தேன். வந்தாள் மெல்ல மீனாட்சி. பாதி சோடாவை மீதி வைத்துக்கொட்டினாள். பணங்கொடுக்கும்போது பொருமினாள். "நன்னாயிருக்காதுன்னு தெரியும். மாமா சொன்னாரேன்னு பார்த்தேன் - தண்டம், தண்டம்!" என்றாள்; எனக்கு உறுத்திற்று. அவர்களோடே சோடா அருந்திய என் நெஞ்சு என்னென்னவோ எண்ணிவிட்டது. சோடா எனக்கு வேண்டியிருந்ததனால்தான் அத்தனை வற்புறுத்தினேன் என எண்ணிவிட்டாளோ? பணமும் என்னை முந்திக்கொண்டு நாராயணனே கொடுத்துவிட்டார்.

ரயில் வண்டி நிலையத்தில் சுமாராக சுத்தமான இடம் தேடி அரைகுறை திருப்தியுடன் படுத்தோம். சாமான்களை ஏற்றும் தள்ளு வண்டியொன்று இருந்தது; அதில் ஏறிப் படுத்துவிட்டாள் மீனாட்சி.

"எவனாவது வண்டியைத் தள்ளிண்டு போயிடப்போறான்!" என்று நாராயணன் சிரித்தார்.

இப்பொழுது கூட மீனாட்சிக்குச் சிரிப்பு வரவில்லை. "போனால் அவஸ்தை உங்களுக்கென்ன? ஒழிஞ்சாளே அப்படீன்னு வேறொருத்தியை பண்ணிக்கலாம்," என்றாள் குத்தலாக.

"போதும் போதும் வாயை மூடிண்டு தூங்கு," என்று சொல்லிவிட்டு முழங்கையைக் கண்களின் மேல் குத்திக்கொண்டு உறங்க முற்பட்டுவிட்டார் அவர்.

மீனாட்சியை என்னவென்பது வாயாடியா? அசடா? வீண் சண்டை போடும் துஷ்டையா?

** ** **

மறுநாள் பொழுது புலர்ந்தது. நெருக்கும் கும்பலில் எப்படியோ இடம் பிடித்து ஏறினோம். நான் திருவள்ளூர் போகிறவன். அவர்கள் சென்னை. சுமார் நான்கு மணி நேரம் சேர்ந்து பயணம். பிறகு அவரவர் வழியில் பிரிந்து விடுவோம். மீண்டும் சந்திப்போமா?

மீனாட்சி மாறித்தானிருந்தாள். இன்னமும் முகத்தில் மலர்ச்சியில்லை. எனக்கே தெரிந்தது அந்த பாவனை. அவள் கணவருக்குத் தெரியாதா? அவரும் அதற்கேற்றாற்போலவே இருந்தார். ரொம்பவும் உம்மணாமூஞ்சியாக இருக்க வேண்டாம் என்ற கருத்துடனேயே நடுநடுவே கொஞ்சம் பேசினோம். சூழவிருந்த ஜனங்களையும், விரைந்து மறையும் வயல் வரப்புகளையும் பார்த்தோம். நான் தொடர்ந்து வந்தது தான்

மீனாக்ஷிக்குப் பிடிக்கவில்லையா? "உதவிக்கு ரொம்ப நன்றி" என்று சொன்னதுமே, - நன்றியை வெளிப்படுத்தினதுமே - நன்றியின் சுவடு கூட மறைந்துவிடுமோ? வேலவனின் தரிசனம் முடிந்த சிறிது நேரத்திற்குப் பிறகுதான் மீனாக்ஷி இப்படி மாறிவிட்டாள்! "மாமா சொன்னாரென்று பார்த்தேன்! தண்டம் தண்டம்!" என்று சொன்னாள் சலித்து!

கசப்பான சிந்தனையில் மூழ்கிவிடாமல், திருவள்ளூரில் என் வரவை எதிர்பார்த்திருக்கும் என் மகளைப் பற்றிய நினைவில் ஈடுபட்டேன். என் இரண்டாம் பேரனுக்கு நாளைக்குத்தான் ஆண்டு நிறைவு. தாத்தா போய்க்கொண்டிருக்கிறேன் கொஞ்ச நேரத்திற்குள் மீண்டும் என்னெதிரிலிருந்த தம்பதிமேல்தான் கவனம் சென்றது. "குழந்தைகள் காத்திருக்கும்" என்ற ரீதியில் ஒரு வார்த்தையோ, ஒரு நினைப்போ, ஒரு உணர்ச்சியோ தென்படவில்லையே! இவர்களுக்கு மக்கட்பேறு இல்லை என்றே தோன்றிவிட்டது.

ஐயம் விலகி ஊகம் சரி என்று தோன்றினதும், நாவில் கேள்வி ஊசலாடிற்று. "குழந்தைகள் அழைச்சிண்டு வரவில்லையே? பள்ளிக்கூடம் சாத்தல்லையோ?" என்று கேட்டேன்!

"எனக்குக் காலேஜ் லீவ் விட்டாச்சு; புறப்பட்டோம். குழந்தைகள் இல்லை" என்றார் நாராயணன். கல்லூரியொன்றில் பேராசிரியர் அவர்.

"இன்னும் இரண்டு மாசமிருக்கு விடுமுறை. காஞ்சீபுரத்தில் காஞ்சிவரதர் கருடசேவை ரொம்ப நன்னாயிருக்கும்னு அலமேலு மங்காபுரத்திலே ஒருத்தர் சொன்னார்" என்று என்னிடம் சொன்னாள் மீனாக்ஷி, சற்று மனத்தாங்கலாக.

"ஏன், போகலாமே" என்றேன் நான்.

"ஒரே மூச்சில் எத்தனை இடம் பார்க்கிறது? இவளுக்கு இப்போ இது ஒரு வெறி வந்திருக்கு" என்றார் நாராயணன்.

"குழந்தைகள் இல்லை என்றீர்களே....பிறக்கவேயில்லையா?.அல்லது . . ." என்று இழுத்தேன். 'மலடி' என அவளைக் குறிப்பதாக இருக்கவேண்டாமே!

"அந்த துர்ப்பாக்கியம் வரவில்லை" என்று ஒரு மாதிரி சிரித்தாள் மீனாக்ஷி.

'குழந்தைகளைப் பெறுகிற துர்ப்பாக்கியம்' என்றாளா? அல்லது பெற்றுப் பறிகொடுக்கும் துர்ப்பாக்கியம் என்றுதான் சொன்னாளா? என் வினா விளங்கின பிறகு தான் விடை கொடுத்தாள் என்றால், இரண்டாம் விளக்கம் சரிதான்!

பிறகு எப்படிப் பேசுவது என்பது புலப்படாமல் நான் வாயை மூடிக்கொண்டேன்.

'உங்கள் மனைவிக்கு வந்துள்ள வெறி, ஒரு பெண்ணுக்கு இயற்கைதான்' என்று சொன்னால் மீனாக்ஷி சந்தோஷப்படுவாள் என்று என்ன நிச்சயம்?

"ஆச்சு, இன்னும் ஒரு மணி நேரம்; அப்புறம் இறங்கிவிடுவேன்" என்று சொல்லிவிட்டு, "காளஹஸ்தி பிடித்ததா?" என்று கேட்டேன்.

"அதற்கென்ன? பிரும்மாண்டமான கோவில். பிரார்த்தனை ஸ்தலமில்லை போலிருக்கு; அமைதியாயிருக்கு. கோவில் இப்படித்தானிருக்கணும்" என்றார் நாராயணன்.

"கூட்டமும் சந்தடியுமாயிருக்கிற திருப்தியைப் பார்த்த உடனே இதைப் பார்த்தால் என்னவோ பாழடைந்த கோவிலாட்டமாத் தோன்றிவிடறது....." என்று சொல்லிவிட்டு, தவறு செய்துவிட்டாற்போல் கருதி கை விரல்களால் கன்னத்தில் லேசாகத் தட்டிக்கொண்டாள் மீனாக்ஷி.

சிறிது நேரம் எங்கேயோ பார்த்துவிட்டு என் பக்கமாகவே திரும்பினாள். "இத்தனை இடங்களுக்குப் போனோமே, திருப்பதியில் முதன் முதலில் போனது கோவிந்தராஜப் பெருமாள் கோவிலுக்கு; பணம் ஒரு லட்சியமாகத் தோன்றவில்லை. சந்நிதிக்கு சந்நிதி ஒரு அர்ச்சனை பண்ணினோம். ஆனால் ஒரு இடத்திலாவது என் பேருக்குப் பண்ணவில்லை! காளஹஸ்தியில் தான் அம்மனுக்கு என்னைத் தெரியப்படுத்தினது" என்று மீனாக்ஷி ஒரு இடக்குச் சிரிப்புடனே சொன்னாள்.

நானும் சிரித்து வைத்தேன்! மீண்டும் அதையே சொல்கிறாளே என நினைத்தபோது முதலில் திகைப்பு; பிறகு ஒரு நினைவு!

திருத்தணிகையில் குமரன் சந்நிதியில் அர்ச்சனையின்போது குருக்கள் பேர் கேட்டபொழுது நாராயணன் தன் பேரும் நட்சத்திரமும் தான் சொன்னார்! அதைச் சொல்லிச் சொல்லியே வழக்கம்! இதனால் தானோ மீனாக்ஷி அப்புறம் மாறிப் போனாள்? இப்படியுமுண்டோ?

"ஒரு சந்தேகம் மாமா," என்றாள் மீனாக்ஷி. "இவருடைய பேர், நட்சத்திரம் சொன்ன இடத்தில் என்னைச் சேர்க்கவில்லை. ஆனால் ஞானப் பிரசூன்னாம்பாசந்நிதியில் என் பேருக்குச் சொன்னபோது இவருடைய பேரும் சேர்த்துக்கொண்டு அர்ச்சனை செய்தீர்களே! ஏன்?" என்று கேட்டாள் என்னை.

"ரொம்ப ரொம்பச் சின்னத்தனம்" என்று சினமடையாமல் சிரித்தேன். "அவர் பேருக்குச் செய்த இடங்களில், 'தம்பதி சமேதமாக' என்று சேர்த்தேயிருப்பார்கள்!" என்று சொன்னேன். எனக்குத் தெரியாதா சம்பிரதாயம்?

"அந்த மாதிரியே மனைவிபேரில் அர்ச்சனை செய்கிறபோதும் சொல்லிவிடலாமே!"

"செய்யலாம்... புருஷன் ஸ்தானம் கொஞ்சம் விசேஷமாய் ஏற்படுத்திவிட்டார்கள்! புருஷனுக்கு ஏற்படுகிற கஷ்ட சுகம் மனைவியைச் சேர்ந்ததுதானே! ஆயுர் ஆரோக்கிய சுக சௌபாக்கியங்களைக் கணவனுக்கு பகவான் தந்தால் மனைவிக்கும்தான் சேர்கிறது" என்று கூறினேன்.

"அது சரி; சுக சௌக்கியங்கள் எப்படியோ; மனைவிக்கு வருகிற கஷ்ட சுகம் கணவனுக்கும் சேரும் என்கிற நியாயம் தான் கிடையாதே!" என்று முணுமுணுப்பாக முன்னுக்குப்பின் முரணாக ஏதோ சொல்லிவிட்டு மீனாக்ஷி, "குழந்தை புருஷனுக்குப் பிறந்தால் அது மனைவிக்குச் சேருமோ?" என்று ஒரு புதுக் குரலில் கோபமும் குறும்புமாகக் கேட்டாள்.

"இளையாளாக வாழ்க்கைப்பட்டவளோ?" என்று ஒரு சிறு சந்தேகப்பொறி இப்போது பளிச்சிட்டது என்னுள்ளத்தில்.

"யாராவது சிரிக்கப் போகிறார்கள்" என்று நாராயணன் சிடுசிடுத்தார்.

"மனைவிக்குப் பிறந்தால் அது புருஷனுக்கு உரிமையாகுமா?" என்று கேட்டாலாவது அர்த்தம் இருக்கிறது! இந்த மீனாக்ஷி என்னதான் கேட்கிறாள்.?

"நான் கத்தவில்லையே" என்று பதிலளித்து கணவனைத் திரும்பிக் கூடப் பாராமல் நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள்.

என்னை அரைகுறையாக நோக்கிவிட்டு, "இந்தத் திருப்பதி பயணம் புறப்படச் சொன்னதே நான்தான். எனக்காகத்தான் இந்தச் செலவும் யாத்திரையும்" என்று அவள் சொல்லும்போதே நான் "இந்தப் பேச்சு ஒரு பெண்ணுக்கு அழகல்ல" என மருகினேன். அவளோ கொஞ்சமும் கூச்சலுமின்றி சொல்கிறாள்.

என்னதான் கேட்டு இடைமறித்திருப்பேனோ தெரியாது. அதற்குள் மீனாக்ஷி, "அவருக்குக் குழந்தை பிறக்கணும் என்றால் இன்னொரு பெண்டாட்டி வரக்கூடுமே!" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி சொல்லி முடித்தாள்!

தில்லை ஈசனை மறைத்த நந்தி விலகி பக்தன் நந்தனுக்கு உதவினாற்போல, மீனாக்ஷியின் உள் மனம் தெரியாமல் தவித்துப்போன எனக்கு அவள் பேச்சு உதவியது!

ஆமாம்; மீனாக்ஷிக்கு மனதில் பயம்! ஆஹா, துடுக்காகவும், கூச்சமற்றவளாகவும், சுயநலக்காரியாகவும் தோற்றமளிக்கும் மீனாக்ஷியின் இதயத்தினுள் எத்தகைய அச்சம் குடிகொண்டுள்ளது!

அர்ச்சனைகள் தன் பெயரில் நடந்திருக்கவேண்டும்; தன்னிடமுள்ள தோஷங்கள் அகலவேண்டும். குழந்தை தனக்கே பிறக்க வேண்டும்; குழந்தைப் பேறு வேண்டி கணவன் மறுமணம் புரிந்துகொள்ளக்கூடாது.

இதுதான் அவள் சொல்கிறாள். அவளை யார் குறை கூறமுடியும்? மகப்பேறு உண்டாகாததற்குத் தானே காரணம் எனக் கருதும் அவளை மெச்ச வேண்டுமே!

தேவ பாஷை எனப்படும் சமஸ்கிருதத்திலே உள்ள மந்திர சுலோகங்கள் என் ஆத்ம திருப்திக்குப் போதா. தாய்மொழியான தீந்தமிழிலே ஈசனைப் போற்றிப்பாடும் தேவாரமும் திருவாசகமும் எனக்கு வேண்டியிருக்கின்றன. அது போலவே மீனாக்ஷிக்கும் கணவனின் அன்பு மட்டும் போதவில்லை. அவளுடைய தாய்மையுணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய குழந்தையின் அன்புறவு தேவையாயிருக்கிறது.

என்னுடைய செந்தமிழ் ஆற்றலுக்கும் சிற்றறிவுக்கும் சான்றாக எழுந்தது ஒரு கற்பனைக் காட்சி. "குழந்தாய்! இதோ உன்னைப் பயந்தாள் முன்னைப்பயந்தாள்!" என்று நான் மீனாக்ஷியின் குழந்தையிடம் சொல்லும் காட்சி. "உன்னைப் பெற்றவள் முன்பு ரொம்ப அச்சப்பட்டாள்!" என்று நான் குழந்தையிடம் கூறுவேன்.

"அடுத்த வருஷம் குழந்தையோடு வாருங்கள்". என்னும் மனங்கனிந்த ஆசி என் நாவினின்றும் நழுவியது.

சட்டென நாராயணனும், மீனாக்ஷியும் சுமுகமாகப் பார்த்துக்கொண்டார்கள்.

"அப்பொழுது குழந்தையின் பெயருக்கே எல்லா அர்ச்சனைகளையும் செய்துவிடலாம்; சண்டை பூசல் வராது" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டேன். என் சொல்லிலும் சிரிப்பிலும் உருக்கம் இழையும்போது நான் அஞ்சுவானேன்?

**********

(சுதேசமித்திரன், ஏப்ரல் 17, 1955)